2013 ஏப்ரல் 29]

பரிசீலித்து செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 348, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

348—

மாணவர் விடுதி

*8188—திரு. மு. ரெத்தினசாமி:

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதி துவக்க அரசு ஆவன செய்யுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினா எழுப்பியுள்ளார்கள். திருவையாறில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவர் விடுதி அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி அவர்கள்.

திரு. மு. ரெத்தினசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்வார்கள். 'அம்மா' நீங்கள்தான் எங்களுக்கு மாதா, (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள்தான் எங்களுக்கு குரு, (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள்தான் எங்களுக்கு தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) என்று அம்மா அவர்களை வணங்குகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. மு. சந்திரகாசி: ஏழையெளிய, நடுத்தர மக்களின் வீட்டுப் பிள்ளைகள் எல்லாம் கல்வி கற்று வாழ்க்கையில் முன்னுக்கு வர வேண்டும்; அப்போதுதான் அவர்கள் வாழ்க்கை மட்டுமல்லாமல் இந்த நாடு செழுமை பெறும் என்ற நோக்கிலே கல்விக்காக 16,965.30 கோடி ரூபாய் இந்தக் கல்வி ஆண்டில் ஒதுக்கி, பெற்றோர்கள் எல்லாம் நம் பிள்ளைகளைப் படிக்க வைக்க அம்மா இருக்கிறார்கள், பிள்ளைகளின் எதிர்காலத்தை அம்மா கையில் ஒப்படைத்துவிட்டோம் என்று கவலையற்று வேறு பணிகளைப் பார்க்கிறார்கள் அம்மா. அப்படிப்பட்ட இந்தச் சூழ்நிலையில், திருவையாறைப் பொறுத்தவரையிலே, அங்கே மொத்தமாக 5 ஆயிரம் பிள்ளைகள், குறிப்பாக 3 ஆயிரம் பெண்கள், 2 ஆயிரம் ஆண் பிள்ளைகள் படிக்கிறார்கள். அவர்கள் தங்கிப் படிக்க ஏற்கெனவே அங்கு ஒரு தங்கும் விடுதி வாடகைக் கட்டடத்தில் இருந்தது. அந்தக் கட்டடம் திருப்புந்துருத்தி என்ற ஊருக்கு மாற்றப்பட்டு, அங்கே புதியதாக அம்மா அவர்களின் ஆணையின்படி திட்டத்துக்கு 75 கோடி ரூபாய்க்குக் கட்டடம் கட்டப்பட்டு, அங்கே இப்போது அது நடைமுறையில் இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், அரியலூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய பிள்ளைகள் எல்லோரும் திருவையாறிலே வந்து படிக்கிறார்கள். அவர்கள் தங்கிப் படிக்க பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் வாயிலாக ஒரு தங்கும் விடுதி அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டி விரும்பி, மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், திருப்பூந்துருத்தி பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி தற்காலிகமாக திருவையாற்றில் செயல்பட்டு வருகின்றது. தமிழகத்தில் மாபெரும் கல்விப் புரட்சி செய்து வரும் நம்முடைய பொற்கால முதல்வர்

மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருணையால், அவர்களின் ஆணையின்படி, திருப்பூந்துருத்தியில் புதியதாகக் கட்டடம் கட்டப்பட்டு வருகின்றது. இக்கட்டடத்திற்கு விடுதி விரைவில் மாற்றப்படும். எனினும் திருவையாற்றில் தேவை ஏற்பட்டால் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அம்மா அவர்கள் ஆணைப்படி நடைமுறைக்கு எடுக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ரெத்தினசாமி அவர்கள்.

திரு. மு. ரெத்தினசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு எங்கள் தொகுதிக்கு ஒரு பொறியியல் கல்லூரியைத் தந்து, அதனை இந்த ஆண்டே துவக்கி, ஏழையெளிய நடுத்தர மக்களுடைய பிள்ளைகள் எல்லாம் பொறியியல் படிப்பு படிக்க வேண்டும் என்ற அம்மா அவர்களுடைய எண்ணத்தை வெளிப்படுத்துகின்ற வகையிலே, இட்ட ஆணைக்கு அங்கு இருக்கின்ற ஏழையெளிய, நடுத்தர மக்கள் எல்லாம் அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகளைச் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதேவேளையிலே, திருவையாறு தொகுதி கல்லணையிலே கரிகால் சோழனுக்கு மணிமண்டபம் கட்ட ஆணையிட்ட பொன்னியின் செல்வி அம்மா அவர்களுக்கும் விவசாய மக்கள் அனைவரும் என்றென்றும் நன்றிக் கடன்பட்டிருப்பார்கள் என்று சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) விரைவிலே அந்தப் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி கட்டிக் கொடுக்க ஆவன செய்யப்படும் என்று சொன்ன மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையை ஏற்று, இங்கே பதிலளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 349, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. துரைக்கண்ணு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.